**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| அரசியல் விஞ்ஞானம் I | தரம் :- 13 | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ***1* தொடக்கம் *50* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிக்கும் *(1) (2) (3) (4) (5)* என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய அதனை குறித்து நிற்க்கும் இலக்கத்தை புள்ளடி (X) இடுக.**
- **ஒரு விடைக்கு *02* புள்ளி வீதம் *100* புள்ளிகள் வழங்கப்படும்.**

- ***1* முதல் *15*** வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் **தொடர்பான ஐந்து கூற்றுக்களை** கொண்டுள்ளது அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். **பிழையான கூற்றை தெரிவு செய்க.**

1. அரசியல் விஞ்ஞானம்
   1) கிரேக்கர் காலம் முதல் இன்று வரை வளர்ச்சியடைந்துள்ளது.
   2) அரசியல் விஞ்ஞானத்தின் மையக்காரணி அரசாகும்.
   3) 19ம் நூற்றாண்டு இறுதிப்பகுதியில் அரச நலன்புரி விடயங்களில் கவனம் செலுத்தியது.
   4) கிரேக்கர் காலத்தில் அரிஸ்ரோட்டிலால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
   5) ஒவ்வொரு காலத்திலும் நடந்த அரசியல் நிகழ்வுகளில் கவனம் செலுத்துகிறது.

2. அரசியல் என்பது
   1) அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்
   2) சர்வதேச அரசியல் கலாசார விழுமியங்களை கற்றல்
   3) அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளில் பங்கேற்றல்
   4) கூட்டு இலக்குகளை அடைதல்
   5) தேர்தலில் பங்கேற்றல்

3. அரசறிவியலைக் கற்பதன் நோக்கம்
   1) அரசியல் பங்கேற்ப்பு தொடர்பான அறிவுபெறல்
   2) அரசியலோடு தொடர்புடைய கோட்பாடுகளை அறிந்து கொள்ளல்
   3) மனித வாழ்வியல் தொடர்பான அறிவை மேம்படுத்தல்
   4) மக்களின் சமூகப் பொறுப்புக்கள் பற்றிய அறிவை பெறல்
   5) பிரசைகள் தமது அரசியல் உரிமைகளையும் கடமைகளையும் உணந்து செயற்படல்

4. அரசு என்பது
   1) நிலைபேற்றுத் தன்மை கொண்டதாக இருக்க முடியாது
   2) சமூகத்தில் காணப்படும் ஏனைய நிறுவனங்களில் தனித்துவமான தாபனம்
   3) வெவ்வேறுபட்ட சிந்தனையாளர்கள் இதன் தோற்றத்தையும், இயல்பையும் வெவ்வேறாக நோக்குகின்றனர்.
   4) கட்புலனாக இலட்சிய மாதிரியாகும்
   5) பலவந்த அதிகாரத்தை பிரயோகிக்கும் தனியுரிமை பெற்றது.

5. அரசு பற்றிய மாக்சிச கோட்பாடு
   1) பாட்டாளி மக்களின் நலன்களை மாத்திரம் கருத்திற் கொண்ட செயற்பாடுகளை கொண்டுள்ளது.
   2) சொத்தின் ஆதிக்க போக்கினால் பிளவுண்ட சமுதாயத்தில் அரசு தோன்றியது.
   3) தாராண்மைவாத ஜனநாயக யாப்பில் காணப்படும் அடிப்படைகளை கொண்டுள்ளது.
   4) கட்சியின் ஏகாதிபத்தியம் ஏகபோகமான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.
   5) கூட்டுறவு முறையிலான மத்தியமயப்படுத்தப்பட்ட பொருளாதார முறையை செயற்படுத்தல்.

6. நவீன தேசிய அரசு
   1) ஒரு இனத்துக்கு ஒரு தேசியம் கலாசார அடையாளம் இருக்க வேண்டும் என ஆரம்பத்தில் குறிப்பிடபட்டதால் கலாசார, மொழி மற்றும் மத ரீதியாக பல்வகைமை தேசத்தை கட்டியெழுப்புவதில் சவாலை எதிர் நோக்குகிறது.
   2) 1789 இல் பிரான்சிய புரட்சியின் பின் ஐரோப்பாவில் முதலாவது தேசிய அரசாக பிரன்ஸ் தோற்றம் பெற்றது.
   3) ஆரம்பகால நவீன அரசுகளுக்கு தேசிய அரசுத்தன்மை இருக்கவில்லை.
   4) 18ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பயன்படுத்தப்பட்ட எண்ணக்கருவாகும்.
   5) ஆரம்பகாலத்திலிருந்து நவீன தேசிய அரசுகள் மன்னராட்சி முறையையே அடிப்படையாக கொண்டு செயற்படுகின்றன.

7. தாரள வாதம்
   1) தாரளவாதத்தின் அடிப்படை எண்ணக்கரு வரையறுக்கப்பட்ட அரசாகும்.
   2) லிபரல் வாதம் மற்றும் நவீன ஜனநாயக வாதம் ஒன்றுக்கொண்டு சமமான வகையில் அபிவிருத்தி அடைந்த அரசியல் எண்ணக்கருவாகும்.
   3) லிபரல் வாத அரசில் முதலாளித்துவ பொருளாதார முறையும், ஜனநாயக ஆட்சி முறையினையும் ஒன்றினைக்கிறது.
   4) சமூகத்தின் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு சமூகத்தினால் அரசு உருவாக்கப்பட்டுள்ளது.
   5) உழைப்பு சுரண்டலற்ற வகுப்புவாதம் இல்லாத சமுகத்தை கட்டியெழுப்புவதே இதன் பிரதான நோக்கம்.

8. நடத்தை வாதமென்பது

1) 1930 களிலும் 1940 களிலும் அமெரிக்க அரசறிவியலாளர்களால் இயற்கை விஞ்ஞானத்திலும், அரசறிவியலும் பயன்படுத்தப்பட்டது.

2) அனுபவம் சார்ந்த கற்கைக்குட்படுத்தப்படும் தனித்தனி மனிதர்களின் அரசியல் நடத்தையையும் அதனைப் பாதிக்கும் காரணிகளையும் ஆராய்கின்றது.

3) சரியான நிலையினை உறுதிப்படுத்தும் விடயங்களை மட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தல்.

4) அரசியல் விஞ்ஞானம் தொடர்பான பொறுமானம் சார் விடயங்களைக் கற்பதற்கு அதிக கரிசனை காட்டுவதனை வலியுறுத்துகின்றது.

5) விஞ்ஞான முறைகளில் அரசியலைக் கற்க்க உதவுகிறது.

9. இறைமை என்பது

1) வல்லரசுகளையும் தேசிய அரசுகளையும் வேறுபடுத்தும் ஓர் அளவுகோலாகும்.

2) நிலையான, பிரிக்கமுடியாத கையளிக்க முடியாத அனைத்தான்மை கொண்டது.

3) அரசுக்கு மட்டும் உரித்தான உயர்வான எண்ணக்கருவாகும்.

4) உள்வாரி, வெளிவாரி என இரண்டு வகைப்படும்

5) இப்பதத்தினை முதன்முதல் அறிமுகப்படுத்தியவர் ஜீன்போடின் ஆவார்

10. மந்திரிசபை அரசாங்க முறை

1) கூட்டுப் பொறுப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு என்ற இரு மூலக் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும்.

2) வினைத்திறன் மிக்கதும் சர்வதிகார தன்மைக்கும் இட்டுச் செல்லத்தக்கது.

3) ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட, அரசியல் ஞானமுள்ள மக்கள் சமுதாயத்தில் வளர்ச்சியை காண முடியும்.

4) பொதுவாக சட்டத்துறையிலிருந்து நிறைவேற்றுதுறை தெரிவு செய்யப்படல்.

5) உண்மை நிர்வாகம், நாம நிர்வாகம் என இரு வேறுபட்ட நிர்வாகப் பிரிவு காணப்படல்.

11. ஒற்றையாட்சி என்பது

1) மத்திய அரசாங்கத்தால் மட்டுமே தேசத்தின் நலன்கள் முன்வைக்கப்படுதல்

2) உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரத்தை பிரித்து வழங்கி பிரதேச மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படுதல்.

3) மத்தியிலும் ஓரங்களிலும் அதிகாரங்கள், பணிகள் மற்றும் பொறுப்புக்கள் அடிப்படைச் சட்டத்தின் மூலம் பங்கிடப்பட்டிருத்தல்.

4) ஒரு தனித்த அதிகார நிலையத்தினை தளமாக கொண்டமைந்திருத்தல்.

5) பிரதேச மூலவளங்களை தேசிய கொள்கையினூடாக சமமாக பயன்படுத்துவதற்கு உதவுதல்

12. பாசிசவாத அரசு

1) நீட்சே முன்வைத்த ''மாமனிதா'' என்ற எண்ணக்கரு பாசிசத்தின் அடிப்படை கருத்தியலில் அதிகம் தாக்கம் செலுத்துகின்றது.

2) அரசனால் இனத்தின் தேவையை பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதால் அரசும் இனமும் சமமாக கருதப்படல்.

3) அரசியல் தாபனங்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு இடமளிக்கப்படுதல்.

4) ஆட்சியாளன் சட்டத்துக்கு மேலானவனாகவும் இருத்தல்.

5) இனவாதம், இராணுவவாதம் என்ற அடிப்படை கருத்தியலை பிரயோகிக்கின்றது.

13. சிவில் சமூகம்

1) அரசுக்கு வெளிவாரியாகவும் சுயாதீனமாகவும் தமது பொது நோக்கங்களுக்காக ஒழுங்கமைத்து கூட்டாக செயற்படுத்தும்.
2) ஜனநாயக அரசியல் சமூகங்களிலும், அரசியல் கட்சிகளுக்கு சமாந்தாரமாகவும் மாற்று அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.
3) அரசின் ஆணை அதிகாரத்திலிருந்து மக்களின் சிவில் அதிகாரத்தை வேறுபடுத்தி காட்ட பயன்படும்.
4) சிவில் சமூகமானது அரசு மற்றும் அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படும் சமூக அரசியல் பகுதியாகும்.
5) ஆசிய, ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிலவிய எதேட்சதிகாரத்துக்கு எதிராக தோன்றிய கருத்தியலாகும்.

14. அரசியற் கட்சிகள்

1) சமூகத்தில் சமூக மற்றும் சமயக் கருத்து முரண்பாடுகளை உருவாக்கும் மூலாதாரமாகும்.
2) பொதுமக்களை அரசியல் செயற்பாட்டிற்குள் கொண்டு வந்து அவர்களுக்கு தலைமைத்துவத்தை அளித்தல்.
3) நவீன ஜனநாயக அரசியலில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக கருதப்படுகிறது.
4) 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இதன் ஆரம்பத்தைக் காணலாம்.
5) ஜனநாயகத்துடன் பிரிக்கமுடியாத ஒன்றோடு ஒன்று நெருக்கமுடையதாக காணப்படுகிறது.

15. அமுக்கக் குழுக்கள்

1) குழுவாக ஒழுங்கமைத்து அரசாங்கத்தின் சட்டங்கள், கொள்கைகள், தீர்மானங்கள் என்பனவற்றின் மீது அழுத்தங்களை ஏற்படுத்துகின்றது.
2) அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடுகின்றன.
3) இவை சார்ந்த தனிப்பட்ட நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.
4) பொதுக் கொள்கைகளை உருவாக்குவதற்கான தகவல்களை அரசாங்கங்களுக்கு வழங்குகின்றன.
5) அரசியல் விடயம் தொடர்பான அபிப்பிராயங்களை உருவாக்குகின்ற முகவர்களாக விளங்குகின்றன.

❖ **16 முதல் 35 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

16. ஐக்கிய அமெரிக்க அரசாங்க முறையானது

A. இதன் யாப்பு பிடெல்பியா மகாநாட்டில் ஜோர்ச் வாசிங்டன் தலைமையில் 1787 உருவாக்கப்பட்டு அதனடிப்படையாக கொண்டுள்ளது.
B. அரசாங்கத்தின் முத்துறைகளிடையே வலுவேறாக்க கோட்பாடு சிறப்பாக பின்பற்றப்படுகின்றது.
C. 1791 இல் யாப்பில் திருத்தம் செய்யப்பட்டு அடிப்படை உரிமை சேர்க்கப்பட்டது.
D. சம பலமான மாநில அரசுகளைக் கொண்ட சமஷ்டி அரசாகும்.
E. நவீன சமஷ்டிவாதக் கொள்கைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

1) A B C D 2) B C D E 3) A B DE 4) A C D E 5) A B C E

17. சுவிற்சலாந்து அரசாங்கமுறை

A. பாராளுமன்ற கட்சி முறையில் விருப்பம் கொண்ட கூட்டு நிறைவேற்று துறை செயற்படல்.

B. அரசியல் தீர்மானங்களின் போது மக்களின் பங்களிப்பு அதிகமாகவுள்ளது.

C. குறு நில மாநிலங்களைப் பிரதிநித்துவப்படுத்த சம அரசு பேரவை செயற்படுகிறது.

D. நாட்டில் கூட்டாட்சி சார்பில் மியுயர் பலம் கொண்ட தீர்பாயம் செயற்படல்

E. எழுதிய இறுக்கமான அரசியல் யாப்பை கொண்டு அமைகிறது.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

18. பிரித்தானிய பிரதமரின் அதிகாரங்களும் பணிகளுமானவை

A. கபினட்டில் சமமானவர்களுள் முதல்வராவர்

B. உலக அரசியலில் கனிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்துவார்.

C. அரசாங்கத்தின் கொள்கைகளை அதிகார பூர்வமாக வெளியிடுவார்.

D. அமைச்சரவையின் அமைப்புக்கும் வாழ்விற்க்கும் முடிவுக்கும் அச்சாணியாக திகழ்கின்றார்.

E. கூட்டுப்பொறுப்பு தத்துவத்திற்கு மேற்பட்டவர்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

19. இந்திய ஜனாதிபதியானவர்

A. இந்திய அரசின் தலைவராவர்

B. உண்மை நிர்வாகத் தலைவராகவும் விளங்குகிறார்.

C. பிரதமர் உள்ளிட்ட ஏனைய அமைச்சர்களை நியமிக்கின்றார்.

D. இவர் தேர்வாளர் கழகம் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுகிறார்.

E. அவசரகால நிலைமைகளில் மூன்று வகையான அதிகாரங்களைப் பெறுகின்றார்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

20. பிரான்சிய ஜனாதிபதி

A. நான்கு வருட பதவிக்காலத்தை கொண்டு இருத்தல்

B. கபினட்டுக்கு தலைமை தாங்குதல்

C. மக்கள் தீர்ப்புக்கு ஆணையிடும் அதிகாரத்தை கொண்டிருத்தல்.

D. இரட்டை வாக்கு முறையால் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுகிறார்.

E. அமைச்சரவை தயாரிக்கும் கட்டளைகளுக்கும் உத்தரவுகளுக்கும் இறுதி அங்கிகாரம் வழங்குதல்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

21. தேர்தல் என்பது

A. அரசியல் முறைமைக்குச் சட்ட முறைத்தன்மையை வழங்கும் ஓர் மூலாதாரமாகும்.

B. பிரதிநிதித்துவ தாபனங்களை அமைக்கும் ஓர் உபாயம்

C. மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறையாகும்.

D. கட்சிச் செயற்பாடுகளில் மக்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை கொடுக்கிறது.

E. வாக்காளர் ஒருவருக்கொருவர் பகையாளியாக்கும் ஊடகம்

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

22. பொதுக்கொள்கையின் அடிப்படை இயல்பு

A. சட்டத்தை அடிப்படையாக கொண்டு நீதிமன்ற அவதானிப்புக்கு அமைய கட்டியெழுப்பப்படுகிறது

B. பரந்த குறிக்கோளும் இலக்கும் இருத்தல்

C. பொது மக்களின் தேவையை அடிப்படையாக கொண்டது

D. குறித்த கொள்கை வகுத்தல் பிரதான அரசியல் நிறைவேற்றதிகாரத்தின் பொறுப்பாகும்.

E. கொள்கை முனைப்பு, கொள்கை உருவாக்கல் கொள்கை நடைமுறைப்படுத்தல், கொள்கை மதிப்பிடல் போன்ற பிரதான கட்டங்களை கொண்டுள்ளது.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

23. பொதுத்துறை நிர்வாக பாடப்பரப்பு

A. பொதுக்கொள்கை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலோடு தொடர்பான விடயங்களை கற்றல்.

B. வெளிநாட்டு தொடர்புகளோடு இணைந்துள்ள நிர்வாகத்தை கற்றல்

C. தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்ட செயற்பாட்டை கற்றல்

D. அபிவிருத்தி தொடர்பான பொருளாதாரத்தை உயர்த்தக் கூடிய உத்திகளை கற்றல்

E. ஆளணி நிர்வாகம் பற்றிய கற்றலைக் குறிக்கும்

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

24. சர்வதேச அரசியல்

A. நடைமுறையில் அரசுகள் தமது தேசிய நலன்களை ஏனைய அரசுகளின் நலன்களுக்கு ஏற்ப இயைபாக்கம் செய்தலை குறித்து நிக்கிறது.

B. மாற்றமுறும் அதிகார உறவுகளுள் இடம் பெறும் அரச கொள்கைகளின் இடை வினைகளை குறிக்கின்றது.

C. தேசங்களிடையே இடம்பெறும் அதிகாரப் போராட்டமும் அதிகாரப் பிரயோகமுமாகும்.

D. இதன் கீழ் செயற்பாட்டாளர் பலவந்த அதிகாரத்துக்கு கீழ்ப்படிவார்.

E. இங்கு அரசு தனது நலனுக்காக போரை நாடும்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

25. முரண்பாட்டை தீர்ப்பதற்கு ஒருவரிடத்தில் இருக்க வேண்டிய திறன்கள்

A. மாற்றுக்கருத்தை ஏற்றுக்கொள்ளல்

B. உடன்பாடான மனப்பாங்குகளை உருவாக்கல்

C. சூழமைவுகள், நடத்தைகள் தொடர்பான மனப்பாங்குகளை ஆக்கபூர்வமாக்கல்

D. புரிந்துணர்வுடன் செயற்படல்

E. தனது தரப்பின் நியாயத்தில் வலுவான மனப்பாங்கை கொண்டிருத்தல்

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

The National e-Learning Portal for The General Education

26. இலங்கையில் காலாணித்துவ அரசுகள் சமூக, பொருளாதார அரசியல் நிர்வாக சீர்திருத்தங்களை அறிமுகம் செய்ததன் நோக்கமானது

A. தமது தாய் நாட்டின் உச்ச நன்மைக்காக குடியேற்ற சமூகத்தை பயன்படுத்தி கொள்ளல்

B. சுதேசிகளுடைய கல்வி சமூக பொருளாதார அரசியலறிவை வளர்த்தல்

C. தமது கலாசாரத்தோடு இக்கலாசாரங்கள் பொருந்தாமையால் அவற்றை மாற்றியமைத்தல்

D. குடியேற்ற நாட்டாட்சியை நிர்வகிப்பதில் ஏற்பட்ட கஷ்டங்கள்

E. குடியேற்ற நாட்டாட்சியை கொண்டு நடாத்துவதற்கான நிதிச்செலவுகள்.

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

27. கோல்புறாக் கமரன் சீர்திருத்தத்தின் பின் ஏற்பட்ட சமூக விளைவுகள்

A. சாதி முறை ஒழிக்கப்பட்டது.

B. கூலி பெறும் ஊழியச் சமூகம் தோற்றம் பெற்றமை

C. நவீன முதலாளித்துவ சமூகம் உருவாக்கியமை

D. ஒரு முன்மாதிரி சிவில் சமூகம் தோற்றம் பெற்றமை

E. இலங்கை சமூகத்தோடு ஒரு புதிய இன் சமூகம் இணைந்தமை

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

28. 1833 இல் உருவாக்கப்பட்ட சட்ட நிர்வாக சபையானது

A. ஆளுனருக்கு ஆலோசனை கூறுகின்ற ஒரு சபையாகும்.

B. நிர்வாக சபையின் ஆலோசனையை தேசாதிபதி கேட்க வேண்டியிருந்தது.

C. இச்சபையில் 6 அங்கத்தவர்கள் இடம் பெற்றனர்.

D. சட்ட நிரூபன சபையைவிட அதிகாரம்கூடிய சபையாக இருந்தது.

E. இந்த ஆலோசனை சபைக்கு தேசாதிபதி தலைவராக இருப்பார்.

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

29. 1924 அரசியல் சீர்திருத்தத்தின் கீழ்

A. அரசாங்க நிர்வாக அதிகாரங்கள் தொடர்ந்தும் ஆளுனர் கையில் இருந்தது.

B. உத்தியோக பற்றற்ற அங்கத்தவர்கள் நிதிக் குழுவில் இடம் பெற்றனர்.

C. பொறுப்பும் அதிகாரமும் வெவ்வேறாக பிரிந்து காணப்பட்டது.

D. மேல் மாகாணத்திலிருந்து இலங்கை தமிழருக்கென 02 பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டன.

E. இனவாரிப் பிரதிநிதித்துவம் நடைமுறையில் இருந்தது

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

30. இலங்கையின் இடது சாரி இயக்கத்தின் தோற்றத்திலும் விருத்தியிலும் செல்வாக்கு செலுத்திய காரணிகள்

A. 1930 களில் நிலவிய உலக பொருளாதார நெருக்கடிகளும், வர்க்கப் பிரச்சனைகளும்

B. தொழிலாளர் இயக்கத்தின் எழுச்சி

C. மேலைத்தேய கல்வி கற்ற மாக்ஸிச சிந்தனையாளர்களால் கவரப்பட்ட புரட்சிகர புத்தி ஜீவிகளின் செயற்பாடு.

D. தேசிய சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் பின்பற்றிய சுறுசுறுப்பற்றதும், உடன்பாட்டுத்தன்மை பொருந்தியதுமான செயற்பாடுகள்.

E. பொப்பிமலர் இயக்கத்துக்கு எதிராக தோற்றம் பெற்ற சூரியமல் இயக்கம்

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

31. டொனமூர் சீர்திருத்தம்

A. இறுக்கமான காலணித்துவ ஆட்சியை தளர்த்தி சுதேசிகளுக்கு அரைகுறை பொறுப்பை வழங்கியது.

B. மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை மட்டும் கொண்ட சட்ட சபையை அமைத்திருந்தது.

C. கலாணித்துவ ஆட்சிமுறையும் சுதந்திர அரசாங்க முறையும் இணைத்து வைத்த பாலமாக அமைந்தது.

D. அரசியல் வாதிகளின் இருப்பு மக்களில் தங்கியிருக்கும் நிலைக்கு மாற்றமடைந்தது.

E. சுதேசிகள் சட்டவாக்க, நிறைவேற்று செயற்பாடுகளில் பங்கேற்பதிலும், பயிற்சி பெறுவதிலும் அனுபவத்தை பெற்றுக் கொண்டனர்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

32. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் தேசாதிபதியானவர்.

A. அரசாங்க சபையை கலைக்கும் அதிகாரத்தை பெற்றிருந்தார்.

B. இலங்கை அரசின் தலைவராக விளங்கினார்

C. அரசாங்க சபைக்குத் தலைமை தாங்கினார்.

D. ஒரு நாம நிர்வாகியாக செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டார்.

E. பிரித்தானிய முடியினதும் அரசாங்கத்தினதும் பிரதி நிதியாக இருந்தார்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

33. சோல்பரி அரசியல் யாப்பின் பிரதான அம்சங்களாக

A. மகா தேசாதிபதியை தலைவராக கொண்ட உண்மை நிர்வாகமுறை

B. வெஸ்மினிஸ்டர் முறையிலமைந்த அரசாங்கம்

C. பிரித்தானிய கோமரைகழகத்தினை உச்சமானதாகக் கொண்ட நீதித்துறை

D. நீதிப்புணராய்வு அதிகாரத்தை கொண்ட நீதித்துறை

E. இரு சபை கொண்ட பாராளுமன்றச் செயற்பாடு

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

34. 1948 அரசியல் யாப்பின் கீழ் பிரதம மந்திரி

A. சட்ட மன்ற உறுப்பினர்களிலிருந்து நாம நிர்வாகியால் நியமிக்கப்பட்டது.

B. அமைச்சரவைக்கு தலைமை தாங்கும் பொறுப்பிலிருந்தார்.

C. சட்டமன்றுக்கு பொறுப்பு கூறவேண்டியவராக இருந்தார்.

D. சட்ட மன்றில் நிறைவேற்றப்படும் ஒரு குற்றப்பிரேரணையின் மூலம் பதவி நீக்கம் செய்யக் கூடியதாக இருந்தது.

E. வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்தார்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

35. 1972 சட்டமன்றம்

A. ஆறு வருட பதவிக்காலத்தைக் கொண்ட ஓரங்க சட்டமன்றமாக காணப்பட்டது.

B. நீதி முன் புணராய்வு அதிகாரம் கொண்டிருந்தமை.

C. சமூக அடுக்கமைவில் சாதாரண மக்கள் பிரதி நிதிகளும் உள்வாங்கப்பட்டனர்.

D. தேசிய பேரவை என அழைக்கப்பட்டது.

E. மீயுயர் அதிகாரம் கொண்ட உயர்ந்த தாபனமாக விளங்கியது.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

❖ **36 முதல் முதல் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் பிழையானவையாகும். பிழையான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

36. 1978 அரசியலமைப்பின்படி மக்களின் சட்டவாக்க தத்துவம் பிரயோகிக்கப்படுவது

A. சட்ட நிர்வாக, நீதி அமைப்புக்களால்

B. பாராளுமன்றினாலும் உள்ளூராட்சி அமைப்புக்களாலும்

C. ஜனாதிபதியாலும் அமைச்சர்களாலும்

D. மக்கள் பிரதி நிதிகளாலும், மக்கள் தீர்ப்பின் மூலம் மக்களாலும்.

E. மாகாணசபையாலும், உள்ளூராட்சி அமைப்புக்களாலும்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

37. 1978. 19ம் திருத்தத்துக்கு அமைய அரசியலமைப்பு பேரவையானது

A. 10 உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது

B. சட்ட மன்ற உறுப்பினர்கள் அல்லாதவர்களை பிரதிநிதிகளாக கொண்டமைந்துள்ளது.

C. ஜனாதிபதியினால் தலைமை தாங்கப்படுகிறது.

D. உயர் பகிரங்க அதிகாரிகளை நியமிப்பதில் ஜனாதிபதிக்கும் மந்திரி சபைக்கும் உதவுதல்

E. உயர் நியமணங்கள், ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை நியமிப்பதற்கு சிபார்சு வழங்குதல்.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

38. இலங்கையின் அரசியற் கட்சிகளின் பொதுவான பண்பு

A. நீண்ட பொருளாதார தத்துவங்களை உள்ளடக்கிய ஒருங்கமைந்த கட்சி முறை

B. நீண்டகால பாரம்பரியங்களைக் கொண்ட வளர்ச்சியடைந்த கட்சிமுறைகள் காணப்படுகிறது.

C. வளர்ச்சியடைந்த ஒரு கட்சிமுறை காணப்படுகிறது.

D. பலவீனமான இடதுசாரிக் கட்சிகள் காணப்படுகின்றன.

E. ஜனநாயகப் பண்புகளுடன் கூடிய வளர்ச்சியடைந்த இருகட்சிமுறை காணப்படுகின்றமை.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

39. 1978ம் இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ்

A. நீதிப்புணராய்வு அதிகாரம் பொருந்திய ஓர் உயர் நீதி மன்றம் தாபிக்கப்பட்டது.

B. ஜனநாயக ஆட்சியை பலப்படுத்துவதற்கு அதிகம் பங்காற்றியுள்ளது.

C. சனாதிபதியும் மந்திரிசபையும் கொண்ட ஒரு கலப்பு நிறைவேற்றுத்துறை உருவாக்கப்பட்டது.

D. ஐக்கிய அமெரிக்க முறையை ஒத்த ஜனாதிபதி முறையை அறிமுகம் செய்தது.

E. இலங்கை அரசின் சமய சார்பற்ற தன்மையை மாற்றியது.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

40. 1978 யாப்பின் அடிப்படை உரிமை தொடர்பாக,

A. 1978 இன் மூல யாப்பிலேயே தகவல் பெறும் உரிமை கொண்டுவரப்பட்டுள்ளது.

B. சர்வதேச மனித உரிமை பிரகடனத்தில் உள்ள உரிமைகள் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் உரிமை ஒத்ததன்று

C. அடிப்படை உரிமை மனுக்களை புணராய்வு செய்ய ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

D. நாட்டின் சமூக விழுமியங்கள் அடிப்படை உரிமைகளுக்கு விலக்களித்து செயற்படுகின்றன.

E. அவசரகால நிலையிலும் அடிப்படை உரிமைகளை இடை நிறுத்த அனுமதிக்கப்படவில்லை.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

❖ **41 முதல் 50 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் மாத்திரம் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

41. 1978 மாகாண சபை

A. பாராளுமன்றத்தில் 42 இலக்க சட்டத்துக்கமைய 13ம் திருத்தத்தின் மூலம் மாகாணசபை உருவாக்கப்பட்டது.

B. நியதிச்சட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆளுநரின் அங்கீகாரம் தேவை.

C. நான்கு வருட காலத்துக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை மட்டும் கொண்டது.

D. மாகாணசபைக்குரிய உறுப்பினர் சனத்தொகையையும் நிலப்பரப்பையும் அடிப்படையாக கொண்டு தெரிவு செய்யப்படுகின்றனர்.

E. ஒவ்வொரு மாகாணத்துக்கு ஒன்று வீதம் தாபிக்கப்பட்டுள்ளன.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

42. இலங்கையின் உள்ளூராட்சி மன்ற முறை தொடர்பாக

A. மூன்றுவகையான தாபனங்களை கொண்டிருக்கும்

B. பாராளுமன்ற சட்டங்களின் கீழ் தாபிக்கப்பட்டது

C. தத்தமது பிரதேச எல்லைக்குள் அபிவிருத்திகளை மேற்க்கொள்ள முடியும்.

D. துணைநிலைச் சட்டங்ளை மட்டும் ஆக்க முடியும்

E. மத்தியரசின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றன.

1) A B C D 2) B C D E 3) A B D E 4) A C D E 5) A B C E

43. 1978 19ம் திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதி

A. பிரதம நீதியரசரை தற்துணிவின் பேரில் நியமிக்கும் அதிகாரத்தை பெறுகின்றார்.

B. அமைச்சரவையின் தலைவராக செயற்படுகின்றார்.

C. ஜனாதிபதி வேட்பாளரானவர் 35 வயதடைந்தவராக இருத்தல் வேண்டும்.

D. ஜனாதிபதிக்கெதிராக அடிப்படை உரிமை வழக்கொன்றை தாக்கல் செய்யமுடியும்.

E. பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்படும் சட்ட மசோதா தொடர்பாக மக்கள் தீர்ப்புக்கு விடும் அதிகாரமில்லை.

1) A B C D  2) B C D E  3) A B D E  4) A C D E  5) A B C E

44. 18ம் திருத்தசட்டம் தொடர்பாக

A. இது ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் வலுவுள்ளதாக்கியுள்ளது.

B. அரசியலமைப்பு பேரவையின் சிவில் சமூகத்திற்கு நியமனம் பெறும் ஐந்து உறுப்பினர்கள் இல்லாமல் போகின்றனர்.

C. ஜனாதிபதி பதவிவகிக்கும் தடவையை எல்லையற்றதாக்கியது.

D. அரசியலமைப்பு பேரவை என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது.

E. மூன்றுமாதங்களுக்கு ஒருதடவை ஜனாதிபதி பாராளுமன்றம் செல்வதை கட்டாயமாக்கியது.

1) A B C D  2) B C D E  3) A B D E  4) A C D E  5) A B C E

The National e-Learning Portal for The General Education

45. ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான குறிக்கோள்

A. உலக சமாதானத்தை நிலைநாட்டல்

B. அங்கத்துவ நாடுகளின் உள்விகாரங்களில் தலையிடுதல்

C. ஏழ்மையில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்

D. ஒருநாடு மற்றொரு நாட்டுக்கு எதிராக படைப்பலத்தை உபயோக்காதிருத்தலும் அச்சுறுத்தாதிருத்தலும்

E. எல்லா அரசுகளும் பிரகடனத்திற்க்கு கட்டுப்படுவதை பிரயோக ரீதியாக்கல்

1) A B C D  2) B C D E  3) A B D E  4) A C D E  5) A B C E

46. பொது நலவாய அமைப்பானது

A. சர்வதேச ரீதியாக இயங்கும் ஓர் அரசசார்பற்ற நிறுவனம்

B. பிரித்தானியப் பிரதமரின் தலைமையில் இயங்குகின்ற ஒரு நிறுவனமாகும்.

C. காலணித்துவத்திலிருந்து விடுபட்ட நாடுகளால் உருவாக்கப்பட்ட அமைப்பு

D. பொருளாதார, அரசியல், கலாசார துறைகளில் அந்நியோன்ய ஒத்துழைப்பை வளர்த்தலை நோக்காக கொண்டது.

E. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை அங்கத்துவ நாடுகள் ஒன்று கூடுவர்

1) A B C D  2) B C D E  3) A B D E  4) A C D E  5) A B C E

47. சார்க் அமைப்பின் பிரதான நோக்கம்

A. பிராந்திய பொருளாதார, சமூக மேம்பாடும் கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

B. அங்கத்துவ நாடுகள் மத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்தல்.

C. ஒத்த நோக்கத்தையும் இலக்குகளையும் கொண்ட சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களுடன் ஒற்றுமையாக செயற்படல்.

D. சர்வதேச ரீதியாக நலன்புரி வேலைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் வாழ்கை நிலையை உயர்த்தல்.

E. அரசியல் நோக்கத்தைக் கொண்ட ஒரு பிராந்திய நிறுவனம்.

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

48. சர்வதேச செஞ்சிலுவை சங்கமானது

A. இன மத பேதமின்றி நபர்களின் தேவைகளை நிறைவேற்றல்

B. இலாப நோக்கற்று தொண்டர் அடிப்படையில் நிவாரணம் வழங்கல்

C. போரினால் பாதிக்கப்படுவோரின் பொதுநலனுக்காக செயற்படும் அரச சார்புள்ள அமைப்பு

D. மனித குலத்தின் நன்மை கருதி செயற்படும் அமைப்பு

E. 1864 ஜெனிவா உடன்படிக்கையின் படி உருவாக்கப்பட்டது.

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

49. சர்வதேச மன்னிப்புச்சபை

A. பொதுவாக சர்வதேச சமூகத்தில் "அம்னஸ்டி" என பிரபல்யமடைந்துள்ளது.

B. மனித உரிமை மீறல் தடுத்தலை நோக்காக கொண்டுள்ளது.

C. இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு 1963 செப்டெம்பர் நிறுவப்பட்டது.

D. போரினால் பாதிக்கப்பட்ட, போர்கைதிகளின் நலன்களில் கவனம் செலுத்தும் அரச சார்பு நிறுவனமாகும்.

E. இதன் அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் 2.2 மில்லியனை தாண்டியுள்ளது.

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

50. இலங்கையின் வெளிநாட்டுக்கொள்கை

A. 1948 – 1956 ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஆட்சியிலிருந்து வெளிநாட்டு உதவிகள் பெறும் போக்கு விருத்தியடைந்தது.

B. சுதந்திரத்துக்கு பின்னும் இன்று வளர பிரித்தானியாவுடனான வெளிநாட்டுறவு தொடர்புபடுகிறது.

C. 1948 – 1956 காலப்பகுதியில் கம்பூனிஸ்ட் நாடுகளுக்கெதிரான கொள்கையை பின்பற்றியது.

D. இன்றைய தேசிய அரசாங்கம் முதலாளித்துவ, சோசலிச இரு நாட்டு உறவுகளிலும் கவனம் செலுத்துகிறது.

E. சென்ற அரசாங்கம் முதலாளித்துவ மேற்குஐரோப்பிய நாடுகளுடன் சுமுகமான தொடர்பை பேணியது.

1) A B C D    2) B C D E    3) A B D E    4) A C D E    5) A B C E

The National e-Learning Portal for The General Education

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| அரசியல் விஞ்ஞானம் II | 23 | T | II | தரம் :- 13 | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|

### பகுதி – II
### பகுதி – A

**அறிவுறுத்தல்**

- இவ்வினாப்பத்திரம் A, B, C மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.
- பகுதி A ஆனது 20 குறு வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பூரண விடைக்கும் 1 புள்ளியும், அரைகுறை விடைக்கு ½ புள்ளியும் வழங்கப்படும். சகல வினாக்களுக்குமான குறு விடைகள் இத்தாளிலேயே எழுதி அதனை பகுதி B.C ஆகியவற்றின் விடைத்தாள்களுடன் இணைத்து கையளிக்குக.
- பகுதி B யிலிருந்தும் C யிலிருந்தும் இவ்விரண்டு வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை அளிக்குக.

1. "நிச்சயிக்கப்பட்ட வரலாற்று நிலைகளில் வளர்ச்சியடைந்து பல்வேறு அரசியல் தளங்களில் பல மடைந்து பல்வேறு இயல்புகளைப் பெற்ற சமூக நிறுவனம்"
"அரசின் ஆணையதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை,ஆயுதம் தாங்கிய படைகள், பதவி இயந்திரம் போன்ற நிறுவனங்களையும் அவை தொடர்பான சட்டங்களையும், விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் வரையறை செய்வது"
இவை தொடர்பான அமைப்புக்களைக் குறிப்பிடுக.
   1) ……………………………………………………………………………………………
   2) ……………………………………………………………………………………………

2. "ஐரோப்பிய அரசுகளில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியோடு உருவாகிய சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக சமூக சமத்துவத்தையும் சொத்துக்களின் மீதான பொது சமூக உரிமைகளையும் வலுப்படுத்தும் கருத்தியல்"
"தனிமனித வாழ்க்கையில் சமூக, பொருளாதார, அரசியல் கலாச்சார துறைகளில் சுதந்திரத்தை மூலக்கொள்கையாக கொண்ட கருத்தியல் தொகுதி" என்பவற்றைக் குறிப்பிடுக.
   1) ……………………………………………………………………………………………
   2) ……………………………………………………………………………………………

3. நடத்தைவாதத்தின் தந்தை என அழைக்கப்படும் அறிஞரையும், அரசியல் இலக்கணம்" எனும் நூலின் ஆசிரியரையும் குறிப்பிடுக.
   1) ……………………………………………………………………………………………
   2) ……………………………………………………………………………………………

4. “பிரித்துக் கொண்டுள்ள ஆர்வங்கள், நோக்கங்களின் பெறுமானங்களுக்காக அதிகாரப் பிரிப்பின்றி கூட்டாக செயற்படல்”

“அரசியல் ரீதியாக ஒழுங்கமைத்த ஒரு சமூகத்தில் தனியாட்கள் அங்குள்ள அதிகார பீடங்களுடன் இணைந்து செயற்பட்டு அதிகார பீடங்களைச் சுற்றி நடந்து கொள்ளல்” இக்கூற்றுக்கு பொருத்தமான கருத்தியலை குறிப்பிடுக.

1) ..........................................................................................................

2) ..........................................................................................................

5. “இலட்சிய அரசு” யுடோப்பிய ஆட்சி முறை போன்ற அரசியல் கருத்தியல்களை முன்வைத்த அறிஞர்களை குறிப்பிடுக.

1) ..........................................................................................................

2) ..........................................................................................................

6. “அரசு மனிதனின் இயற்கையான சேரிடமாகும். ஏனெனில் அவன் ஓர் மிருகமாகவோ கடவுளாகவோ அல்லது மனித தத்துவத்திற்கு கீழ்பட்டனவாகவோ, மேற்பட்டவளாகவோ இருக்க வேண்டும்.”

“அரசியல் என்பது ஒரு போராட்டம், அது அதிகாரப் போராட்டம் சகல அரசியலும் அதிகார அரசியலாகும்”

மேலே குறிப்பிட்ட இரு கூற்றுக்களும் முன்வைக்கப்பட்டுள்ள இரு நூல்களின் பெயர்களையும் அவற்றின் ஆசிரியர்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

1) ..........................................................................................................

2) ..........................................................................................................

7. “அரசாங்க செயற்பாடுகள் முக்கிய அரசியல் நபர்கள், முக்கிய அரசியல் நிகழ்வுகள் தொடர்பில் குடிமக்கள் வெளிப்படுத்துகின்றது”

“அரசியல் அதிகாரத்தை கையாளும் ஆட்கள் மற்றும் நிறுவனங்களில் செல்வாக்கு செலுத்துவதன் மூலம் தனது நோக்கங்களை நிறைவேற்றி கொள்வதற்காக இயங்கும் அமைப்பு” யாது?

1) ..........................................................................................................

2) ..........................................................................................................

8. மோதலின் பிரதான இரு பகுதிகளையும் குறிப்பிடுக.

1) ..........................................................................................................

2) ..........................................................................................................

9. சர்வதேச நிறுவனங்கள் இரு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விரு வகைகளையும் குறிப்பிடுக.

1) ..........................................................................................................

2) ..........................................................................................................

10. அண்மைக்காலத்தில் அரசறிவியலில் அறிமுகம் செய்யப்பட்ட நிர்வாகம் இரண்டு பிரதான வகைகளைக் கொண்டதாகும் அவ்விரு வகைகளையும் குறிப்பிடுக.

1) ........................................................................................................................

2) ........................................................................................................................

11. 1919 இல் தோற்றம் பெற்ற இலங்கை தேசிய காங்கிரசின் போராட்ட வழிமுறைகள் இரண்டையும் குறிப்பிடுக.

1) ........................................................................................................................

2) ........................................................................................................................

12. மனின்ங் டிவன்சயர் அரசியல் சீர்திருத்தத்தின கீழ் தேசாதிபதி பெற்றிருந்த ஒதுக்கு அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

1) ........................................................................................................................

2) ........................................................................................................................

13. இலங்கையில் முதன் முதல் வாக்குரிமையை அறிமுகம் செய்த சீர்திருத்தத்தையும், பிரதேசவாரி பிரதிநித்துவத்தை அறிமுகம் செய்த சீர்திருத்தத்தையும் குறிப்பிடுக.

1) ........................................................................................................................

2) ........................................................................................................................

14. "சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றுக்கு சட்டவாக்கம் தொடர்பான பூரண இறைமை அதிகாரம் வழங்கப்படவில்லை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்" அப்பாராளுமன்றத்தின் அதிகாரத்தின் மீது விதிக்கப்பட்ட இரண்டு தடைகள் குறிப்பிடுக.

1) ........................................................................................................................

2) ........................................................................................................................

15. 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் அமைச்சரவைக்கு ஆலோசனை கூறுவதற்கு அமைக்கப்பட அமைப்புகள் இரண்டையும் தருக.

1) ........................................................................................................................

2) ........................................................................................................................

16. முதலாம் குடியரசு அரசியல் அமைப்பின் கீழ் தேசிய அரசுப்பேரவை சட்ட ஆக்கத்தின் மியுயர் கருவியாவதற்கு அரசியல் அமைப்பில் எடுக்கப்பட்டுள்ள இரண்டு நடவடிக்கைகளை தருக.

1) ........................................................................................................................

2) ........................................................................................................................

17. இலங்கையில் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றுகளுக்கும் அதிகாரத்தை மாற்றி கொடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள இரு வழிமுறைகள்

1) ........................................................................................................................

2) ........................................................................................................................

18. 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்புக்கான 18ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அமைப்பையும் 19 திருத்த சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அமைப்பையும் அதன் உறுப்பினர் எண்ணிக்கையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

19. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பாக செயற்படுவதற்காக நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக பதவியொன்று உருவாக்கப்பட்டது. அப்பதவியையும், இலங்கையில் அடிப்படை உரிமைகள் தொடர்பாக சட்ட ஏற்பாட்டையும் யாப்பில் அறிமுகம் செய்த அரசியல் யாப்பையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

20. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இரு வேறுபட்ட முறையில் அங்கத்துவம் இடம் பெறுகிறது. அவ்வாறான அங்கத்துவத்தையும், எண்ணிக்கையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

The National e-learning Portal for The General Education

## பகுதி – B

1) "அரசறிவியல் அரசை மையப்படுத்தியே கற்கப்படுகிறது." ஆராய்க

(20 புள்ளிகள்)

2) பின்வருவனவற்றில் இரண்டினை பற்றி கருத்துரைக்க

i. அரசின் தோற்றம் வளர்ச்சி எதிர்காலம் பற்றி தாராளவாத கருத்துக்கள்

ii. அரசு பற்றிய மாக்சிசவாத கருத்துக்கள்

iii. அரசாங்கத்தின் அதிகாரத்தை கட்டுப்படுத்தும் வழிமுறை

iv. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் அனுகூலம் பிரதிகூலங்கள்.

(10X2=20 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றில் இரண்டினைப் பற்றி மதிப்பிடுக.

i. அரசியல் கலாசாரம்

ii. அரசியல் சமுதாயப்படுத்தல்

iii. மனித உரிமைகளை பாதுகாக்கும் வழி முறைகள்

iv. வலுவேறாக்கக் கோட்பாடும் நடைமுறையும்.

(10X2=20 புள்ளிகள்)

4) பின்வருவனவற்றில் இரண்டு தலைப்புக்களின் கீழ் ஆராய்க.

i. பிரான்சின் ஜனாதிபதியின் அதிகாரமும் பணிவும்

ii. சுவிற்சலாந்து கூட்டு நிறைவேற்றுத்துறை

iii. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் வகிபங்கு

iv. இந்திய அரசியலமைப்பின் சமஷ்டி மூலக் கொள்கைகள்.

v. தேசிய அரசியலுக்கும் சர்வதேச அரசியலுக்குமான வேறுபாடு.

(10X2=20 புள்ளிகள்)

## பகுதி – C

5) இலங்கைத் தேசியத்துவம் தொடர்பில் தேசிய காங்கிரசின் வகிபங்குபற்றி மதிப்பிடுக.

6) பின்வருவனவற்றில் இரண்டினை ஆராய்க. (20 புள்ளி)

i. டொனமூர் அரசாங்க முறையிற் தேசாதிபதியின் அரசியல் மற்றும் யாப்புறு நிலை.

ii. சோல்பரி அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் சிறுபான்மையினரின் காப்பேடு

iii. 1972 ஆம் யாப்பில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய விடயங்கள்

iv. சோல்பரி அரசியல் சீர்திருத்தத்துக்கு பதிலாக புதியதொரு அரசியலமைப்பினை உருவாக்குவதில் பின்னணியாக அமைந்த காரணிகள்.

The National e-learning Portal for The General Education

7) *1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் பின்வரும் இரண்டினை ஆராய்க.*

i. *தகவலுக்கான உரிமை சட்டம்*

ii. *19 திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதியின் நிலை*

iii. *மத்திய அரசுக்கும் மாகாணசபைக்கும் உள்ள தொடர்பு – (மத்திய சபைக்கும் மாகாண சபைக்கும் உள்ள தொடர்பு)*

iv. *19ம் திருத்தத்துமைய உருவாக்கப்பட்ட தேசிய பெறுகை ஆணைக்குழு*

(10X2=*20 புள்ளிகள்)*

8) *பின்வரும் இரண்டினைப் பற்றி மதிப்பிடுக.*

i. *பொதுநலவாய அமைப்பு*

ii. *சர்வதேச சமாதானத்தை ஏற்படுத்துவதில்* ஐக்கிய நாடுகள் சபையின் பங்கு

iii. தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு

iv. சர்வதேச நீதிமன்றம்.

The National e-learning Portal for The General Education